**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 227/2025**

Deposition of LW 10 Additional witness Examined as : PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : ராதா பாய் | Defence | : |
| Father Name | : முருகையன் | Court | : |
| Village | : உதவி ஆய்வாளர், பூம்புகார் காவல் நிலையம் | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 54/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பூம்புகார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்ளவார் சேகர் மற்றும் உதவி ஆய்வாளர் சேதுபதி ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த19.09.2021ஆம் தேதி காலை 06.00 மணிக்கு பூம்புகார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலலை பெற்று அங்கு சென்று பார்த்த போது அவர் மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாக தெரிவித்ததன் அடிப்படையில் அவரது வீட்டிற்கு சென்று தமிழரசன் என்பவரிடமிருந்து புகார்

வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண் 430/2021, இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவுசெய்தார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேற்படி வழக்கு கோப்புகளை மேல்விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் சேதுபதி அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அவர் வழக்கினை மேல் விசாரணை எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிற்றரசன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரி தேடியபோது எதிரி பூம்புகார் பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி 19.09.2021ம் தேதி காலை 09.30 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இவ்வழக்கில் காயம்பட்ட அசா1ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஹபீசா சுல்தானா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிந்து அவர் கொடுத்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றை பெற்றார். அந்த **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4. பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து 28.10.2022, இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல்

சம்பவ சாட்சிகளை விசாரிக்காமல் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.